

நெய்வேலி முன்னாள் நகர அவைத்தலைவர் , முன்னாள் தொ.மு.ச. தலைவர் சிவன்தான் செட்டி அவர்கள் உடல் நலக்குறைவினால் என்.எல்.சி மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்றுவருகிறார். உழவர் நலன் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மருத்துவமனைக்கு நேரில் சென்று உடல் நலன் விசாரித்தார். கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன்,தலைமை பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி மற்றும் கழக நிர்வாகிகள்,தொ.மு.ச,நிர்வாகிகள் உடல் நலன் விசாரித்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின்

# தமிழ்நாட்டின் உரிமையைப் பெற போராடி வருகிறார்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!

செஞ்சி, ஏப். 24-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 72வதுபிறந்த நாள் விழா மற்றும் திமுக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஜெயங்கொண்டான் ஊராட்சி கலைஞர் திடலில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும் ,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆறுமுகம், குமார், அனுசுயா மணிபாலன் ,மதியழகன், இக்பால், அய்யாதுரை, கோடீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஜெயங்கொண்டான் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் நெல்லை ஜான், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு தி.மு.க. அரசின் சாதனைகளை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசு



கையில்:

தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நான்காண்டு காலத்தில் தமிழ்நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.முதலமைச்சரின் மகளிருக்கு விடியல் பயணத்திட்டம் மகளிர் உரிமை திட்டம் என தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டங்களையும் சொல்லாத திட்டங்களையும் செய்து இந்தியாவுக்கே முதன்மை முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்.

ஆனால் ஒன்றிய பா.ஜ.க. மோடி தலைமையிலான அரசு செய்ய வேண்டிய கடமைகளை செய்யவில்லை வெளிநாட்டில் பதுக்கி உள்ள கருப்பு பணத்தை மீட்டு இந்தியாவில் உள்ளவர்களின் வங்கி கணக்கில் செலுத்துவேன் என தெரிவித்தார் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குவேன் என தெரிவித்தார்.சொன்ன திட்டத்தை எதையும் செய்யாமல் பத்து பணக்காரர்கள் வாங்கிய கடனை முழுமையாக தள்ளுபடி செய்தவர் பிரதமர் மோடி.

100 நாள் வேலை செய்யும் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள் 100 நாள் வேலை திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மறுத்து வருகிறார்பிரதமர் மோடி.

கல்வித்துறைக்கும் ஊரக வளர்ச்சி துறைக்கும் ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக வழங்க வேண்டும் எனமுதலமைச்சர்கோரிக்கை வைத்துள்ளார்.

ஆனால் முதலமைச்சர் கேட்ட நிதியை பிரதமர் மோடி வழங்காமல் மறுத்து வருகிறார்.வெளிநாட்டில் கச்சா எண்ணெய் குறைந்துள்ளது ஆனால் இந்தியாவில் பெட்ரோல் டீசல் சிலிண்டர் விலையை உயர்த்தி ஏழைகளுக்கு விரோதமான ஆட்சியை நடத்திவரும் பிரதமர் மோடிஏழை எளிய மக்களின் தலையில் ஜிஎஸ்டி வரி சுமத்துகிறார் ஒட்டு மொத்த ஏழைகளின் பணத்தை சுருட்டி பத்து பணக்காரர்கள் ஆட்சி செய்ய மோடி அரசு செயல்பட்டு வருகிறது மக்களுக்காக குரல் கொடுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிற்காகவும் தமிழ் மக்களுக்காகவும் போராடக்கூடிய தைரியமான செயலு டன் இந்தியாவிலேயே மோடியை தட்டி கேட்கின்ற ஆண் மகனாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திகழ்வதாகவும், ஒன்றிய பாஜக அரசுடன் கள்ளகூட்டணி வைத்து தமிழகத்தில் நீட் தேர்வு கொண்டு வந்து பல மாணவர்கள் உயிர் இழந்ததற்கும், அதிமுக ஆட்சி காலத்தில் மின் கட்டணம் உயர்விற்கு காரணமான உதய் மின் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது, விவசாயி என்று கூறி விவசாயிகளை பாதிக்கும் மூன்று வேளாண் சட்டங்களை நிறைவேற்றிட ஆதரவு தெரிவித்தது, சிறுபான்மையினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சிஏஏ சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தஎடப்பாடி பழனிச்சாமிக்கும்,ஒன்றிய பாஜக அரசுக்கும் தமிழக மக்கள் கண்டிக்கின்ற நிலை வந்துள்ளது.இன்றைக்கு தமிழ்நாட்டின் மாநிலத்தின் உரிமையை பெற்று தருவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போராடி வருகிறார்.ஒன்றிய பாஜக அரசை கண்டித்து துணிச்சலாக போராடக் கூடிய ஒரு முதலமைச்சர் நாம் பெற்றிருக்கிறோம் எனவிழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் ,செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் விஜயராகவன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ் சேரிகணேசன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா, அனந்தபுரம் பேரூர் தலைவர் முருகன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திலகவதிவிஜயகுமார்,மாவட்ட சிறுபான்மையினர் நல அணி துணை அமைப்பாளர் மாத்தூர் தாஸ் ,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வாகித்,ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் ராமு, ஏரி நீர்ப்பாசன சங்கத் தலைவர் மணிவண்ணன், கிளை பொறுப்பாளர் ஏ. ஜி. சரவணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜம்போதி பழனி, துணை அமைப்பாளர்கள் செஞ்சி பழனி, பாலகிருஷ்ணன், முரளி, தச்சம்பட்டு செந்தில்,செஞ்சி மத்திய ஒன்றிய நிர்வாகிகள் வாசு, செல்வமணி, தாட்சாயணி கார்த்திக்கேயன், அனையேரி ரவி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஜெயங்கொண்டன் , ஜம்போதி, கலர்பாலையம், பொன்பத்தி, மேல் எடையாளம் உள்ளிட்ட ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கிளைக் கழக செயலாளர் மேனகா சரவணகுமார் நன்றி கூறினார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பெங்களூர் வி.டி.சண்முகம்**
**ஏப்ரல் 24 (2018)**



**தி.மு.கழகம் தொடங்கிய போதே, கர்நாடக மாநிலத்தில் தனது 12 வயதில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, 50 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராகவும், கிளை கழகச் செயலாளராகவும், தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், கர்நாடக மாநில அமைப்பாளராக, மாநில பொறுப்புக் குழுத் தலைவராக கழகப் பணியாற்றியவர்.**

**கருநாடக மாநிலத்தில் கழகத்திற்கென "கலைஞரகம்" எனும் மூன்று அடுக்கு மாடிக் கட்டிடத்தை பெங்களூர் இராமச்சந்திராபுரம் பகுதியில் கட்டுவதற்கு அரும்பாடுபட்டவர்.**

**பிரதமர் நேருவுக்கு கறுப்பு கொடி, இந்திரா காந்தி அம்மையாருக்கு எதிராக கறுப்பு கொடி, ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இரயில் மறியல் போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த பல போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


# நெருப்பில் பூத்த சோழ நிலா!

திருவாரூர் ஆன்மீகத்தின்அறநெறி பரப்பிய ஊர்களில் ஒன்று!

தியாகராஜர் தினவெடுத்து நிற்கும் தீர்த்த கரையான திருவாரூர் எனும் ஆன்மீக ஆல நிழல் பரப்பிய அறநெறி பூத்துக் குலுங்கும் ஊர்களில் ஒன்று!

அப்பரும், சுந்தரரும், ஞானசம்பந்தருமான மும்மூர்த்திகள் புழங்கிய புண்ணிய தலம் என்பர்! "ஆழித்தேர் " ஓடிய அந்தத் திருக்கோயில் ஆரூர் மண்ணில் தான்; பெரியாரும் அண்ணாவும், கலைஞரும் பகுத்தறிவுப் பாதைக்குப் பவள மல்லிகைகள் தூவிப் பதியம் போட்டனர்.

நெஞ்சை ஈர்க்கும் தேவாரப் பதிகப் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. பூபாளம் பாடி வரும் பொன்னி ஆற்றுக் கரை ஆலயங்களில் 123 ஆவது புகழ்த்தலம் எனச் சிறப்புப் பேறும் உண்டு. நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் பசுமைப் பூத்த பகுதியான காவிரித் தென்கரை தெம்மாங்கு பாடும் திருத்தலம் என்பாரும் உண்டு! கடவுளைத் தேடித் தேடி அலையும் பக்திமார்களுக்குப் பிரம்மபுரீஸ்வரர் சுயம்பு மூர்த்தியாக அருள் தரும் ஞானபூமியாம் திருவாரூர் என்பதும் உண்டு!இப்படியான பல்வேறு அடையாளங்களை ஆன்மீகவாதிகளால் முத்திரை பதிப்பதும் ஆரூருக்கு உண்டு!

அங்கேதான் நாத்திகப் பகுத்தறிவுச் செடி வேரை நட்டு வைத்தார் பெரியார்! பூந்தோட்டத்தில் புகுந்த பூந்தென்றலாய் பேரறிஞர் அண்ணா மறுமலர்ச்சிப் பாதையைப் பதியம் போட்டார்!

அடிக்கடி அங்கு ஆகமப் பூகம்பங்கள் பூத்துக் குலுங்கும் போதும்; திருவிழாக் காலங்களில் பரப்புரைப் புயல் தாக்குதல் நடத்திய போதும்; நகராமல் நாத்திக நாணல்கள் நடனமாடி நட்டுவாங்கம் செய்திருக்கின்றன!

அங்கேதான் திருக்குவளை மண்ணும் திருவாரூருக்கு இடம்பெயர்ந்தது. கலைஞர் என்ற காவிய நாயகன் அவதாரம் எடுத்தார்!

பெரியாரின் வருகையால் ஆன்மீக இருட்டு மண்டபம் இடிந்து விழுந்தது. எட்டுத் திசையும் பகுத்தறிவொளி பரப்பி வென்றது! கருத்துக் கடல் அலையாய்ப் பசி எடுக்க, மின்சாரப் பாய்ச்சலாய் மனித மின்னல்கள் இறங்கி மேய்ந்தன! அண்ணாவின் அறிமுகத்தால் அறிவுக் கடல் நீச்சல் பழக்கியது.

நாவுக்கரசரின்நா முழக்கங்கள் கேட்ட ஊரில்தான்... சுந்தரரின் சுந்தரத் தமிழ் சுடரொளி பரப்பிய ஊரில் தான்.... ஞானசம்பந்தரின் ஞான உபதேசங்கள் பரப்புரை செய்த ஊரில் தான்..... திராவிட இயக்கத் தலைவர்கள் ஆன பெரியாரும், அண்ணாவும் பிரவேசம் செய்தனர். அவர்களால் கலைஞரோ நாத்திக அவதாரம் எடுத்தார். நாதியற்ற தமிழ் இனத்திற்கும்,நற்றமிழுக்கும் சிறகு முளைக்க சித்திர வலம் வந்தார்.

திருவாரூர் தீர்க்கதரிசியான கலைஞரின் குடும்ப உறவில் பூத்த உறவுகளில் இரு சகோதரிகள். அவர்களில் ஒருவர் சண்முக சுந்தரத்தம்மாள். அவரின் புதல்வர்கள் முரசொலி மாறன், முரசொலி செல்வம். மற்றொரு சகோதரியின் மகன் அமிர்தம். அவர்களைத் தோளிலும், மடியிலும் கிடத்தி, தன் மூச்சினை ஊட்டி; திராவிட இயக்கக் கொள்கைப் பால் புகட்டிக் தொண்டர்களாக உலவ விட்டு, உற்சாகக் கனல் மூட்டியவர் கலைஞர்.

**கவிஞர்**
**தமிழ்தாசன்**
**கழகத் தீர்மானக்குழுத் தலைவர்**



சட்டம் பயின்றவர் என்றாலும் கழக அரசியலை சட்டமாக்கிக் கொண்டவர். அண்ணாவால் "செல்வா....! செல்வா..!" என்று செல்லமாக அழைக்கப்பட்ட ஆரூர் செல்லக்கிளி செல்வம்!

வெள்ளைச் சட்டை, கருப்புப் பேண்ட், டை கட்டி நீதிமன்றம் போக வேண்டிய அவர் ; தமிழ் சாதியைக் காப்பதற்கு மக்கள் மன்றத்திற்காகக் கலைஞரின் அடிச்சுவட்டில் பயணம் செய்தவர்.

"இனியவன் என் செல்வம்" என்ற கலைஞருக்குத் தன் அண்ணன் முரசொலி மாறனைப் போல், சிறு வயது முதல் முரசொலியைத் தோளில் போட்டுத் தூக்கிச் சுமந்து உதவியாக இருந்தவர்.

அவரை வளர்த்து ஆளாக்கிய ஆசானாக இருந்தவர் கலைஞர். எனினும் அவரிடத்தில், நித்தம் நித்தம் கண்டிப்புக்குள் கல்லடிப்பட்ட கனிமரமாகப்பழுத்தவர். பத்திரிக்கை உலகில் வசிட்டரான கலைஞரிடத்தில் அர்ஜுனாகப் பயிற்சி எடுத்தவர். மாறன், அமிர்தம், அழகிரி, ஸ்டாலின், தமிழரசு எனத் பின்னிப் பிணைந்து தேக்கு மரமாக வளர்ந்து கிளை பரப்பியவர்.

கலைஞரின் மடி தவழ்ந்த அன்பு மகளார் செல்வியை மண முடித்திட முத்தமிழ் தலைவர் மனக்குடிலில் வசித்து வந்த மருமகன் தான்.

முரசொலி அலுவலகத்தில் ஒரு லுங்கியைக் கட்டிக் கொண்டு, பனியனை மாட்டிக் கொண்டு, ஓடும் அச்சியிடும் எந்திரத்தில், எழுத்துக்களை அச்சு கோத்துச் சரி பார்த்தல், பெட்டிச் செய்தி எழுதுதல்,செய்திகளுக்குத் தலைப்பிடுதல், மீண்டும், மீண்டும் பிழை திருத்துதல்,சந்தாதாரர் முகவரி பட்டியல் தயாரிப்பைச் சரி பார்த்தல், முழுதும் முடிந்த செய்தி தாங்கி வெளிவந்த முரசொலியை அனுப்பி வைத்தல் என்பன போன்ற பணிகளில் அவர் கடைநிலை ஊழியனாகவே இருந்து செயல்பட்டுவந்திருக்கிறார்.

ஒரு சின்ன ஆளு உலகத்தில் அவர் செய்த பணியோ பெரிது. பிழைகள் பொறுக்காத கலைஞரிடம் நெருப்பில் வெந்த தங்கமாகவே வாழ்ந்து மின்னி மறைந்திருக்கிறார்.

தேர்தல் காலங்கள் முதல் திரைப்படம் துறை வரை கால் பதித்த சுயமரியாதை சுடர் அவர்!

கழக வளர்ச்சிக்காகத் தளபதிக்குத் தோளோடு தோள் நின்ற நாயக்கர் மஹால் தூணும் அவரே! புயலிலும், மழையிலும் தாக்குதல் கண்டு வரும் தளபதிக்கு ஆறுதல் தந்த புன்னை மர நிழல் அல்லவா?

பத்திரிக்கைப் பணியில் பல்கலைக்கழகமாக விளங்கிய கலைஞர் கைபடும் பாடப்புத்தகங்களில் ஓர் அத்தியாயமாக இருந்தவர்.

வடிவமைப்பு செய்து இரவு பகலாக ஊர்க் குருவி போல் பறந்து, பறந்து வேலை செய்தவர்.

வி.பி சிங்கின்ஒன்றிய அமைச்சரவையில் முரசொலி மாறன் பதவி ஏற்ற பின்னர், முரசொலியின் நிருவாக ஆசிரியர் பொறுப்பை ஏற்றார் செல்வம். அவரது வைரம் ஏறிய எழுத்துக்கள், மற்றவர்களுக்கு உந்து சக்தியாகவே அமைந்தது.

நெருக்கடி கால நெருப்பாற்றின் கலைஞருடன் பயணப்பட்டவர். முரசொலி மாறனும் தளபதியும் காராக்கிரகத்தில் தழும்புகள் ஏற்றபோதும், தணிக்கைக் குழுத் தண்டனையில் தப்ப முரசொலிக்கு முத்திரை பதித்தவர்; அண்ணா சாலை மேம்பாலத்தில் இருந்து, அண்ணா சிலை வரை



அவரும், மு.க.அழகிரி, மு.க.தமிழரசு, செல்வி எனச் சர்வாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகம் காக்கும் சுதந்திரப் போரில் நின்றவர்கள். துண்டுப் பிரசுரங்களை ஏந்தி, ஒவ்வொரு கடை, கடையாக, பேருந்தில் ஊர்திகளில் வந்தவர் களிடம் கருத்துரிமை வேலையை செய்தவர்கள்.

"சர்காரியா கமிஷன்", "முரசொலி – சில நினைவலைகள்" ஆகிய நூல்கள் எழுதியும் மண்டூகங்களுக்கு மடை விளக்கம் தந்தவர். அவரது சிலந்தி வலை அரசியல் பின்னலில் சிக்காதவர்கள் யாரும் இல்லை!தப்பியவர்களும் தரணியில் இல்லை!

நெருக்கடி கால கட்டத்தில் வன்முறையாளர்களால் முரசொலி தீக்குளித்தது. தீய சக்திகளின் சவால்களை ஏற்றுக் கொண்டு ஒரு தாயின் பங்களிப்பைச் செய்து காப்பாற்றிய செவிலித்தாய் அவர்!

ஆட்சியாளர்கள் அத்துமீறலைக் கண்டு அஞ்சாமல், சட்டமன்றக் கூண்டிலேறி சண்டமாருதமாக முழங்கியவர். "கூண்டு கண்டேன்! குதூகலம் கொண்டேன்!" என்று கலைஞரால் வர்ணிக்கப்பட்டவர்.

பாலைவன ரோஜா படத்தில் பட நாயகன் சபாரத்தினம் உயிரை விடும்போது, இறுதிக் காட்சியில், தனது பேனாவை இளைய தலைமுறைக்குப் பத்திரிக்கைப் பணியாற்ற ஒப்படைப்பார். அது போல இன்றைக்கு பல எழுத்தாளர்களுக்குத் தனது எழுதுகோலை ஒப்படைத்து விட்டு சென்றிருக்கிறார் என்று தளபதி தன் இரங்கற்பதிவில் முத்திரையாகப் பதிவு செய்துள்ளார்.

"மூத்த பிள்ளை முரசொலி என் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்தது மட்டுமல்ல; சிறு வயது முதல் அண்ணனாக – என் சகோதரி செல்வியின் கணவர் எனும் மைத்துனராக –பத்திரிக்கைப் பயிற்சி தந்தவராக – கலைஞரின்மாறாப் பற்றுடைய மருமகனாக இருந்த கொள்கைத் தூணை இழந்து நான் நிற்கிறேன்; தலைவர் கலைஞருக்குப் பிறகு, நான் சாய்வதற்குக் கிடைத்த கடைசித் தோளை இழந்து வாடுகிறேன்" என்று நமது நெஞ்சையெல்லாம் உருக்குகின்ற இரங்கல் திருவாசகத்தைத் தந்தவர் தளபதி அவர்கள்.

பழகுவதற்கு எளிமை; புத்தகங்கள் படிக்கும் வேட்கை; தரவுகள் சேகரிப்பு;நண்பர்களை வரவேற்கும் உபசரிப்பு; வீட்டில் குடும்ப உறவினர்களை அன்பொழுகப் பழகுதல் என இயக்கத்துக்கு தூண்! அன்பும், பண்பும் வற்றாத ஞானக் கங்கை என்று இருந்த அவர்; எரிகாட்டில் கொள்கைச் சாம்பலாக மணந்து கொண்டிருக்கிறார்!

செல்வம் எழுதிய பனிமலைக் குழம்பில் எரிமலைகள் குளித்திருக்கின்றன.அவரின் பேனா மையால் நையாண்டியும், நகைச்சுவையும் நிரம்பி வழிந்தன. அவரின் கருத்து மழையில் நனைந்த கொள்கைவாதிகள் ஏடு கண்டு ஆனந்த துண்டுகளால் துவட்டியிருக்கிறார்கள்.

அன்றாட அரசியலுக்கு அச்சாணியாய் விளங்கியவர். ஆர்ப்பாட்டம் எடுத்து , அநீதி பரப்பிய அரசியல்வாதிகளின் உச்சந் தலையில் தனது எழுத்தாணியை இறக்கியவர்.

அவர் சிலந்தி எனும் பேரில் எழுதிய கட்டுரைகள் மூலம் அரசியல் எதிரிகள் எவரும் தப்ப முடியாது! கல்லாக இருந்த பலரை; செல்வத்தின் விரல்கள் பட்டு அவர்களை சிலையாக செதுக்கியது. பலர் வெற்று தாளாக இருந்தார்கள்; அவர்களை வண்ண ஓவியம் குழைத்துச் சித்திரமாக தீட்டியது செல்வத்தின் பொன் விரல்கள்! பலர் திசை தெரியாமல் இருந்தபோது, தடம் பதிக்க அவர் ஊன்று கோலாக இருந்திருக்கிறார்.

சிலந்தியின் சீண்டல் கண்டு சிறு நரிகள் ஓலமிட்டு ஓடின. ஆளுபவர்களுக்கு அறிவுத் தூண்டலைத் வார்த்தது!

அச்சு ஊடகங்களில் தந்த அவரது எழுத்துக்களால், நச்சு உண்ணிகள் நாண்டு செத்தன. அவரோ எழுத்துலகில் அழியா அருங்காட்சியகம்!

தாகம் தீர்க்காத தண்ணீர் பந்தல் அல்ல அவர்; தமிழர்களின் மடியில் விழுந்த தங்க புதையல்!

அதிர்ந்து பேசாத அரசியல் ஞானம் பெற்றவர். எனினும் ஆழமான கொள்கையில் நீச்சல் பழகியவர். அவர் அடக்கமுடையவர் தான் : ஆனால், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாத அடலேறு!

கலைஞரின் மனசாட்சியான மாறனின் இளவல், செல்வியின் கணவர், கலைஞரின் அணுக்கத் தொண்டர் களான செயலாளர்கள் இந்திய ஆட்சிப் பணியாளர் இராஜமாணிக்கம், கோ.சண்முகநாதன் போன்றோரின் நட்பு பரிமாற்றவளையத்தில் அடிக்கடி வலம் வந்தவர். பணியாளர்களிடத்தில் பாசம் காட்டிச் செய்திப் பந்தி பரிமாறியவர்.

முரசொலியில் பணிபுரிந்த அந்நாள்களில் தளபதிக்குச் செய்தித்தாள் பணியை கற்றுக் கொடுத்த வசிட்டர் அண்ணன் செல்வம். "குட்டி அத்தான்" என்றும், "மூத்த அண்ணன்" என்றும் அன்பாக ஆரத்தழுவித் தளபதியால் அழைக்கப்பட்ட முரசொலி செல்வத்திற்கு, இன்று சிலை திறப்பு விழா! அவர் எழுதிய சில கட்டுரை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா!

அவர் மறைந்தார் ஆனால், இன்று பிறந்தார்! என்றும் அவர் நம் நெஞ்சங்களில் இருப்பார் அவர் பிடித்த பேனா நம் கையில் இருக்கிறது! அவர் நம்மிடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற படைக்கலன்கள் மூன்று : ஒன்று கொள்கை முரசான முரசொலி! இரண்டு எத்தனை அச்சுறுத்தல்கள் வந்தாலும், ஆர்த்தெழும்கொள்கைக்கான விடாமுயற்சி! மூன்று : எவருக்கும் தலைதாழாமல் இழக்காத எழுதுகோல்!

வாழ்க அண்ணன் முரசொலி செல்வம்! ஓங்குக அவரது புகழ்